## மே – 19 – பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு

**“ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கின்றேன்”**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி14 : 21 டி - 27

அந்நாட்களில் பவுலும், பர்ணபாவும் லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோக்கியா ஆகிய நகரங்களுக்குத் திரும்பி வந்தார்கள்.அங்குள்ள சீடர்களின் உள்ளத்தை அவர்கள் உறுதிப்படுத்தி, ”நாம் பலவேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்” என்று கூறி நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவித்தார்கள்.அவர்கள் ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவனிடம் வேண்டித் தாங்கள் நம்பிக்கை கொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள்பின்பு பிசிதியா வழியாகப் பம்பிலியா வந்தார்கள். பெருகை நகரில் இறைவார்த்தையை அறிவித்தபின் அத்தாலியா வந்தார்கள். அங்கிருந்து கப்பலேறி அந்தியோக்கியா வந்தார்கள் அங்குதான் அவர்கள் அருள் வழங்கும் கடவுளின் பணிக்கென்று அர்ப்பணிக்கப்பட்டார்கள். இப்போது அப்பணியைச் செய்து முடித்துவிட்டார்கள்.அவர்கள் அங்கு வந்ததும் திருச்சபையைக் கூட்டி, கடவுள் தங்கள் வழியாகச் செய்த அனைத்தையும், அவர் பிற இனத்தவர்க்கு நம்பிக்கை கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்ததையும் அறிவித்தார்கள்.

**பதில்பாடல் :** என் கடவுளே உம்மைப் புகழ்ந்துரைத்துவேன்.

### இரண்டாம் வாசகம் : திருவெளிப்பாடு 21 : 1 – 5

யோவான் நான் புதியதொரு விண்ணகத்தையும் புதியதொரு மண்ணகத்தையும் கண்டேன். முன்பு இருந்த விண்ணகமும் மண்ணகமும் மறைந்துவிட்டன. கடலும் இல்லாமற் போயிற்று.அப்பொழுது புதிய எருசலேம் என்னும் திருநகர் கடவுளிடமிருந்து விண்ணகத்தை விட்டு இறங்கிவரக் கண்டேன். தன் மணமகனுக் காகத் தன்னையே அணி செய்து காண்ட மணமகளைப்போல் அது ஆயத்தமாய் இருந்தது.பின்பு விண்ணகத்திலிருந்து எழுந்த பெரும் குரல் ஒன்றைக் கேட்டேன். அது, ”இதோ! கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள்தாமே அவர்களோடு இருப்பார் அவரே அவர்களுடைய கடவுளாய் இருப்பார்.அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்து விடுவார். இனிமேல் சாவு இராது. துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது முன்பு இருந்தவையெல்லாம் மறைந்து விட்டன” என்றது.அப்பொழுது அரியணையில் வீற்றிருந்தவர், ”இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” என்று கூறினார். மேலும், ””இவ்வாக்குகள் நம்பத்தக்கவை, உண்மையுள்ளவை” என எழுது” என்றார்.

### நற்செய்தி : யோவான் 13 : 31 – 33, 34 - 35

இறுதி இரா உணவின் பின் யூதாசு அறையைவிட்டு வெளியே போன பின் இயேசு, ”இப்போது மானிடமகன் மாட்சி பெற்றுள்ளார். அவர் வழியாகக் கடவுளும் மாட்சிபெற்றுள்ளார். கடவுள் அவர் வழியாக மாட்சி பெற்றாரானால் கடவுளும் தம் வழியாய் அவரை மாட்சிப்படுத்துவார். பிள்ளைகளே, இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள். ஆனால் நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது. ”ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்” என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்” என்றார்.

**தியானம்:** “அன்பார்ந்தவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக. ஏனெனில், அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை, ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்” (1யோவா.4:7-8). அன்பே கடவுள். அந்த அன்பிலிருந்து உருவாக்கப்பட்ட நாமனைவரும் அன்பாய் இருக்க வேண்டும் என்பதே கடவுளுடைய விருப்பம். ஆனால் இந்த அன்புக்குப் பதிலாக மனிதரிடத்தில் வெறுப்பு, கோபம், காழ்ப்புணர்ச்சி, பழிவாங்கும் தன்மை என்று அனைத்து விதமான தீமையின் சக்திகளைத்தான் நாம் இன்று காண்கின்றோம். “அவரோடு இணைந்திருக்கும் எவரும் பாவம் செய்வதில்லை. பாவம் செய்பவர் எவரும் அவரைக் கண்டதுமில்லை, அறிந்ததுமில்லை. பாவம் செய்து வருகிறவர் அலகையைச் சார்ந்தவர், ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அலகை பாவம் செய்து வருகிறது. ஆகவே அலகையின் செயல்களை தொலைக்கவே இறைமகன் தோன்றினார்” (1யோவா.3:6,8). அலகையின் சக்திகளுக்கு உட்பட்டவர்கள், பாவத்திற்கும் பலவீனத்திற்கும் அடிமையாகிப் போனவர்கள் கடவுளின் அன்பைச் சுமந்து செல்பவர்களாக மாறமுடியாது. பாவத்திற்கு இறந்தவர்களால்தான் கடவுளின் அன்புக்கு உயிர்க்க முடியும். பாவத்திற்கு இறக்க வேண்டுமென்றால் பாவத்திற்கு நம்மை இட்டுச் செல்லும் இந்த சரீரத்தை அடக்கி ஒடுக்கி ஆழ நம்மை தூய ஆவியானவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். “ஊனியல் மனநிலை கடவுளுக்குப் பகையானது. கடவுளின் ஆவி உங்களுக்குள் குடி கொண்டிருந்தால். நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல. மேலும் தூய ஆவியின் துணையால் உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால் நீங்கள் வாழ்வீர்கள். கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்” (உரோ.8:7,11,14). நாம் பிறரை அன்பு செய்ய முடியாதபடி நம்மை தடுத்து வைத்திருப்பது நமது ஊனியல் மனநிலை. நாம் மனதில் அனுபவித்துக்கொண்டிருக்கும் காயங்கள், கடந்த காலத்து நினைவுகள், ஒருவரைப்பற்றிய தவறான எண்ணங்கள், முற்சார்பு எண்ணங்கள் இவைகள் மனிதர்களை அன்பு செய்யமுடியாதபடி நம்மை தடுத்துநிறுத்தும் காரியங்கள். தூய ஆவியால் இயக்கப்படுகின்ற மனிதர்கள் இயேசுவைப் போன்று மன்னிக்கவும், மறக்கவும், ஒவ்வொரு மனிதரையும் இருப்பதுபோல அன்பு செய்யவும் கற்றுக்கொள்ளுகின்றார்கள். ஒவ்வொருநாளும் சிலுவையை தியானித்து சிலுவையில் இயேசு கற்றுக்கொடுத்த மன்னிப்பையும் அன்பையும் தன்னோடு வாழுகின்ற சகோதர சகோதரிகளுக்கு நாம் ஒவ்வொருநாளும் கொடுத்துவாழ கற்றுக்கொள்ளுகின்றோம். இயேசுவின் சிலுவையின் அன்பே நமது வாழ்வின் அடிப்படையாக மாறட்டும்.